# அதிவேகப் பாதையில் வாகனம் செலுத்தும் போது கடைப்பிடிக்க வேண்டியவை

அதிவேகப் பாதைகளில் வாகனம் செலுத்துதல் எமக்குப் புதிய அனுபவமாக அமைவதுடன் இவற்றில் பாதுகாப்பாக வாகனம் செலுத்துவதற்கும் இலங்கையில் உள்ள அதிவேகப் பாதைகளின் உச்ச பயனைப் பெற்றுக் கொள்வதற்கும் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டிய சில விதிமுறைகள் உள்ளன. அதிவேகப் பாதைகளில் வாகனம் செலுத்துபவர்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு இவ்வழிகாட்டல்களைத் தயாரித்து உங்களுக்கு இலவசமாக விநியோகிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

*எம். ரணசிங்ஹ - முகாமைத்துவப் பணிப்பாளர்*
*எம். எம். ஓர்கனைசேஷன் பிரைவெற் லிமிடட்.*
*"உங்கள் டொயோட்டா உதிரிப் பாகஉதவியாளர்"*
*இல 194 பஞ்சிகாவத்தை வீதி, கொழும்பு 10*

### 1. அதிவேகப் பாதையொன்றில் வாகனம் செலுத்துவதற்குத் தீர்மானிக்க முன்னர்

அதிவேகப் பாதையொன்றில் வாகனம் செலுத்துவதற்குத் தீர்மானிக்க முன்னர் உங்கள் வாகனம் சிறப்பாக இயங்கும் நிலையில் உள்ளதா? என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். குறிப்பாக வாகனத்தின் எஞ்சின், ப்ரேக் தொகுதி, ஹெட்லைட், சிக்னல் லைட், கண்ணாடி மற்றும் டயர் என்பவற்றைப் பரிசோதிக்க வேண்டும். சாதாரண பாதையொன்றில் வேகமாக செலுத்துவதற்குப் பொருத்தமற்றதாக இருக்கலாம்.

உதாரணம் : அரைவாசி தேய்ந்த டயர்கள், சாதாரண பாதையொன்றில் வாகனத்தைத் செலுத்துவதற்கு ஏற்றதாக இருப்பினும், அவ்வாறான டயர்கள் கொண்ட வாகனத்தை அதிவேகப் பாதையொன்றில் வேகமாக செலுத்துதல் மிகவும் ஆபத்தானது. மேலும் உங்கள் வாகனத்தில் பயணம் முடியும் வரை செலுத்தத் தேவையான போதுமான அளவு எரிபொருள் உள்ளதா? என்றும் வீதிக் கட்டணத்தைச் செலுத்துவதற்கான பணம் உள்ளதா? என்றும் பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

### 2. அதிவேகப் பாதையில் பிரவேசித்தல

அதிவேகப் பாதையில் பிரவேசித்தவுடன், வீதியிலுள்ள ஏனைய வாகனங்களின் வேகத்தை கவனித்து அவற்றின் வேகத்திற்கு ஏற்ற வகையில் பாதுகாப்பாகவும் சீராகவும் வாகனத்தைச் செலுத்துங்கள்.

### 3. கண்ணாடியைப் பயன்படுத்துதல

வாகனத்தின் உள்ளே உள்ள பின் பக்கம் தெரியும் கண்ணாடியும் பக்கக் கண்ணாடிகளும் அதிவேகப் பாதைகளில் வாகனம் செலுத்துவதற்கு மிகவும் அவசியமானவையாகும். அதிவேகப் பாதைகளில் நுழைவதற்கு மட்டுமன்றி மற்றுமொரு வாகனத்தை முந்திச் செல்லவதற்கும் ஒழுங்கையை மாற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இடது பக்க ஒழுங்கைக்கு மீண்டும் வரும்போதும் இந்தக் கண்ணாடிகளைப் பயன்படுத்துவது அத்தியாவசியமாகும்.

**4. தென்படாத இடங்களை கூர்ந்து அவதானித்தல்**

உங்கள் வாகனத்திற்கு அருகில் இருக்கும் தென்படாத இடங்களைக் காட்டுவதற்கு கண்ணாடிகளால் முடியாது போகலாம். வேகமாக வாகனத்தை செலுத்தும்போதும், வாகனத்தின் ஒழுங்கையை மாற்றும் போதும் தென்படாத இடங்களைப் பார்ப்பதற்காக உங்கள் தோளுக்கு மேலால் எட்டிப் பாருங்கள்.

**5. வேக வரையறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுங்கள**

வேக எல்லைகள் எப்போதும் 100 கி மீற்றர்களாக இருக்கமாட்டாது. பாதையின் சில இடங்களில் வேக எல்லை குறைவாக இருக்கும். பாதையில் திருத்த வேலைகள் நடைபெறுதல், மழை நாட்களின் போது, விபத்துக்குள்ளான வாகனமொன்று அப்புறப்படுத்துதல் போன்ற சந்தர்ப்பங்களில் வேகத்தைக் குறைப்பதற்கு வேக எல்லைகள் காணப்பட முடியும். ஒவ்வொரு முறையும் வேக எல்லைக் குறியீடுகளையும் சமிக்ஞைப் பலகைகளையும் பார்க்க வேண்டும். அனுமதிக்கப்பட்டுள்ள வேக எல்லைகளை மிஞ்சி வாகனத்தை செலுத்துகின்றீரா? என்று உங்களால் பார்க்க முடியாது என்பதால் அடிக்கடி வேக மானியைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

**6. உரிய முறையில் முந்திச் செல்லுதல்**

நீங்கள் அதிவேகப் பாதையில் செல்லும் போது மெதுவாக முன்னோக்கிச் செல்லும் வாகனங்களை முந்திச் செல்வதில்லையென்றால் வீதியின் இடது பக்க ஒழுங்கையில் உங்கள் வாகனத்தை செலுத்த வேண்டும். வேறொரு வாகனத்தை முந்திச் செல்ல நினைத்தால் அங்கு வாகனத்தை ஒழுங்கையிலிருந்து வெளியே எடுக்கும் போதும் உள்ளே எடுக்கும் போதும் கண்ணாடி ஒளிக் குறியீடுகளையும் பாதுகாப்பு முறைகளையும் கடைப்பிடியுங்கள்.

**7. இடது பக்கத்தில் செலுத்துதல**

மெதுவாக முன்னோக்கிச் செல்லும் வாகனங்களை முந்திச் செல்லும் போது ஏனைய சந்தர்ப்பங்களில் இடது பக்கத்தில் உங்கள் வாகனத்தை செலுத்த வேண்டும் என்பது சட்டமாகும். நீங்கள் வலது பக்க ஒழுங்கையில் பயணம் செய்வீர்களாயின் அது தொடர்பில் அதிவேகப் பாதைப் பாதுகாப்பு பொலிஸார் வெளியேறும் இடத்துக்குத் தெரிவித்து உங்கள் மீது தண்டம் விதிக்க முடியும்.

**8. இடைவெளியைப் பேணுதல்**

வாகனம் அதிக வேகத்தில் செலுத்தப்படுகின்றது என்பதால் வாகனத்தை நிறுத்துவதற்கு உங்களுக்கு கூடுதலான இடைவெளி தேவைப்படும். நீங்கள் வாகனத்தை மணிக்கு 80 கி. மீ என்ற வேகத்தில் செலுத்துவதாயின், முன்னால் செல்லும் வாகனத்தில் இருந்து ஆகக் குறைந்தது 80 மீ. இடைவெளி பேணப்பட வேண்டும். உங்களுக்கும் உங்களுக்கு முன்னால் செல்லும் வாகனத்துக்கும் இடையில் போதிய இடைவெளி உள்ளதா? என்பதை உறுதிப்படுத்தி 2-செக்கன் விதியைப் பின்பற்றுங்கள்.


*Toyota Parts at reasonable prices with a guarantee*
**M.M. Organisation Pvt Ltd**

**2- செக்கன் விதி:**

என்பது உங்கள் வாகனத்திற்கு சரியான இடைவெளியைப் பெற்றுக் கொள்ளும் இலகுவான முறையாகும். வீதி விளக்கு அல்லது பாலம் போன்ற நிலையான அடையாளம் ஒன்றை தெரிவு செய்து உங்கள் முன்னால் செல்லும் வாகனம் அவ் அடையாளத்தைத் தாண்டிச் செல்வதிலிருந்து

**9. வாகனம் செயலிழந்து விட்டால**

வாகனத்தை முடிந்தளவு அவசரமாக, அவசர நிறுத்தல் ஒழுங்கைக்கு எடுத்துச் சென்று, அபாய வெளிச்சத்தை ஒளிரச் செய்யுங்கள். வாகனத்தை நிறுத்திய பின்னர், கைத்தொலைபேசி அல்லது பாதையின் இருபக்கத்திலும் உள்ள அவசரத் தொலைபேசியைப் பயன்படுத்தி உதவிக்காக அழையுங்கள்அவசர அழைப்பு இலக்கம் 1966 என்பதாகும்.

**10. செலுத்தும் நேரத்தில் ஒருபோதும் கைத்தொலைபேசியைப் பயன்படுத்தாதீர்கள்**

வாகனத்தை செலுத்தும் நேரத்தில் கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவது குற்றமாகும். உங்கள் பாதுகாப்பைக் கவனத்திற் கொண்டுடே ஹேண்ட் - ∴ பிரீ பயன்படுத்துவதையும் தவிர்ந்து கொள்ளுங்கள் (அல்லது மட்டுப்படுத்துங்கள்). சிறிதளவு கவனம் சிதறடிக்கப்படுவது கூட தவறுதலான தீர்மானத்திற்கு காரணமாக அமையலாம். அதிவேகப் பாதையில் அது பாரிய விபத்துக்களை ஏற்படுத்த முடியும்.

**11. வாகனத்தை உரிய முறையில் வெளியே செலுத்துங்கள**

நீங்கள் பயணம் செய்யும் பாதையை உரிய முறையில் திட்டமிட்டு வெளியேறுவதற்கான சமிக்ஞைகளை அவதானியுங்கள். இதன் மூலம் வெளியேறுவதற்கு நீங்கள் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்பதை அறிந்து கொள்ளமுடியும். வெளியேறும் இடத்தைத் தாண்டிச் சென்றுவிட்டால் திரும்பி வருவதற்கான வழி அதிவேகப் பாதையில் இல்லை. அதனால் அடுத்த வெளியேறும் ஒழுங்கையில் வெளியேறித் திரும்ப வர வேண்டியிருக்கும். இது உங்கள் நேரத்தையும் பணத்தையும் வீணடிப்பதாக அமையும

**12. ஆசனப் பட்டிகள்**

உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்வதற்காகப் பின்பக்க ஆசனத்தில் அமர்ந்திருக்கும் பயணிகள் உட்பட அனைவரும் ஆசனப் பட்டிகளை அணிவது அவசியமாகும்.

**13. பிள்ளைகள்**

ஆசனப் பாட்டிகளைப் பயன்படுத்த முடியாத பிள்ளைகளை (குழந்தைகள் மஆசனப் பாட்டிகளைப் பயன்படுத்த முடியாத பிள்ளைகளை (குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகள்) முன்பக்க ஆசனங்களில் அமரச் செய்யக் கூடாது. அவர்களை முன் ஆசனங்களில் பெரியவர்களின் மடியில் வைத்திருப்பதும் தவறானதாகும். அவர்களைப் பின் ஆசனங்களிலேயே அமரச் செய்ய வேண்டும் வட அமெரிக்காவிலும் மற்றும் பல அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் இத்தகைய

கைக்குழந்தைகளையும் சிறு பிள்ளைகளையும் பின் ஆசனங்களில் அனுமதியளிக்கப்பட்ட பின் ஆசனமொன்றில் பாதுகாப்பாகப் பொருத்தப்பட்ட ஆசனமொன்றில் அமர வைப்பது கட்டாயமாகவுள்ளது. அதிவேகப் பாதை விபத்துக்களால் பாதுகாப்பற்ற பிள்ளைகளுக்குக் கடுமையான காயங்கள் ஏற்பட முடியும்.

**14. பாதணி அணிவதைத் தவிர்ந்து கொள்ளுங்கள**

பாதணி அணிவதனால் வழுகிச் சென்று கட்டுப்பாட்டை இழக்க நேரிடலாம். அல்லது அவசரமான நிலைகளில் கால் மாட்டுப்படலாம். அதனால், அதிவேகப் பாதையில் வாகனம் செலுத்தும் போது சப்பாத்துக்களை அணிந்திருப்பது அவசியமாகும்.

**15. செல்ஃபி வேண்டாம்**

அதிபேகப் பாதையிலுள்ள அவசர வாகன நிறுத்தல் ஒழுங்கையை அவசர நிலைகளின் போது மாத்திரமே பயன்படுத்த முடியும் என்பதால் இடைவழியில் வாகதைத்தை நிறுத்தி புகைப்படம் எடுப்பதை அல்லது செல்ஃபி எடுப்பதைத் தவிர்ந்து கொள்ளுங்ள்.

ஆச்சரியப்பட வேண்டாம்: பாதுகாப்புக் கெமராக்களும் பொலிசாரும் நீங்கள் வாகனம் ஒட்டும் போது செய்த மீறல்களை வெளியேறும் இடத்தில் உங்களுக்கு அறிவிப்பர். வெளியேறும் இடத்தில் தண்டமொன்றைச் செலுத்துமாறு வழங்கப்படும் வரையில் நீங்கள் ஏதேனும் ஒரு போக்குவரத்து விதியை மீறியிருப்பது உங்களுக்கே தெரியாதிருக்க முடியும். அதனால் அதிவேகப்பாதைகளில் போக்குவரத்து விதிகளை கண்டிப்பாக கடைப்பிடித்து பாதுகாப்பான முறையில் வாகனத்தைச் செலுத்துங்கள்.

பாதுகாப்பான பயணத்திற்கு நாம் வாழ்த்துகின்றோம்.

**M.** ரணசிங்க

முகாமைத்துவ பணிப்பாளர்.

M.M. ஓர்கனைஸேஸன்

*You need not come to Panchikawatte to buy Toyota Parts.* Call us on -

**0773 78 78 78 I 0714 725 236**

to get them delivered to your doorstep